**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.536/2022 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 09–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதிகள்ஆஜர் இல்லை. 1ம்பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கராஜ் | மாவட்டம் | : நாமக்கல் |
| த/பெ.பெயர் | : தங்கவேல் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : 57 |
| வட்டம் | : | | |

முதல் விசாரணை:

1. நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பில் 2ம் சாட்சி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு பிராத்திக்கிறேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1 ஆவணமான உயிலில் சாட்சி கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடைய கையெழுத்து தான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்து வந்தார்கள் என்றால் நானே தன்னிச்சையாக இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்தேன். இந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது, அசல் வழக்கு எண் என்ன என்பதை நான் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் நான் வழக்கறிஞரிடம் சென்று இருந்தேன் அங்கு பிரமாணவாக்கு மூலம் தயார் செய்யும் போது தெரிந்து கொண்டேன்.

2. மேற்கண்ட சங்தியை யார் மூலமாக நான் தெரிந்து கொண்டு வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால்

செங்கோட்டுவேல் மற்றும் அவரின் மனைவி பாப்புவின் மகன் பிரசாத் மூலமாக தெரிந்து கொண்டேன். நான் சென்ற வழக்கறிஞர் அலுவலகமானது பிரசாத்தின் வழக்கறிஞரின் அலுவலகம் என்றால் சரிதான். பிரசாத்து தான் என்னை வழக்கறிஞர் அவலுவலகத்திற்கு அழைத்து சென்றாரா என்றால் இல்லை நான் பிரசாத்திடம் வழக்கறிஞர் அலுவலக முகவரியை பெற்று நான் சென்று வழக்கறிஞரிரை பார்த்தேன்.

3. மேற்படி வழக்கறிஞர் அலுவலகம் ஈரோடு வெட்டுகாட்டுவலசு என்ற முகவரியில் அமைந்துள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை சொல்லி வழக்கறிஞரால் தட்டச்சு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட பிரமாணவாக்குமூலத்தை தட்டச்சு செய்யும் வரை பிரசாத் வழக்கறிஞர் அலுவலகத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான்.

4. இதற்கு முன்பு வேறு எந்த வழக்கில்லாவது நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் நான் சாட்சியம் அளித்துள்ளேன். மேலும் எனது தந்தைக்காக நாமக்கல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். நான் ஒரு உயிலிலோ, ஆவணத்திலோ மற்றும் பிராம்சரி நோட்டிலோ சாட்சி கையொப்பமிட்டுள்ளேனா என்றால் கிரையபத்திரத்தில் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். உயில் சானத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். சுமார் எத்தனை உயில் சாசனங்களில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் இந்த உயில் சாசனமான பி.வா.சா.1 ஆவணத்தில் மட்டும் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன்.

5. பி.வா.சா.1 ஆவணமான உயில் சாசனத்தை எப்போது நான் நேரடியாக பார்த்தேனா என்றால் 20.08.2018 அன்று நாமக்கல் நோட்டரி ஆபிஸ்ல் பார்த்தேன். நான் மேற்கண்ட பி.வா.சா.1 உயிலை பார்த்த போது தட்டச்சு செய்து முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பங்கள் செய்யப்பட்டு இருந்தது என்றால் வழக்கறிஞர் கையொப்பமிட்டு இருந்தார், தட்டச்சு எழுதினவர் கையொப்பம் செய்திருந்தார். நான் பார்த்தபோது பி.வா.சா.1 ஆவணம் 1 முதல் 5 பக்கங்கள் வரை ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்டடு இருந்தது என்றால் சரிதான்.

6. மேற்கண்ட உயிலில் பாப்பு என்ற பெயரில் கையொப்பம் 1 முதல் 5 பக்கங்களில் போடப்பட்டு இருந்ததா என்றால் 1 முதல் 5 பக்கங்களில் பாப்பு என்ற பெயரில் உள்ள கையொழுத்து போடப்படவில்லை. நான் அரிசி வியாபாரம் நாமக்கல்லில் செய்து வருகிறேன். பிரசாத் எனக்கு உறவினரும் அல்ல, நண்பரும் அல்ல என்றால் சரிதான்.
7. உயிலை நான் 20.08.2018 தேதி பார்த்த அன்று பிரசாத் என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. பி.வா.சா.1 ஆவணமான உயிலை எங்கு வைத்து யார் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாப்பு என்கிற பெயரில் உள்ள கையொப்பம் எங்கு வைத்து போடப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. பாப்புவின் கையெழுத்து நோட்டரி ஆபிஸ்ல் போடப்பட்டுயிருந்தது.
8. பாப்பு தன்னுடைய இறப்பிற்கு முன்பு கடந்த 10 வருடகாலங்களாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு,சிகிக்சை பெற்று வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். பிரசாத்திற்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியும். பி.வா.சா.1 உயிலின் படி பிரசாத்தின் மூத்த சகோதரிகளுக்கு எவ்வித அசையாசொத்தும் கொடுக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது.
9. எனவே பி.வா.சா.1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது, யாரு யாருக்கு என்ன சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பாப்பு இறந்த பிறகு போலியாக பி.வா.சா.1 ஆவணமான உயிலை தயார் செய்வதற்கு நானும் துணைபுரிந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் உள்ள கையொப்பங்கள் பிரசாத்தின் தாயாரான பாப்புவின் கையொப்பங்கள் இல்லை என்றால் சரியல்ல.
10. உயிலில் சாட்சி கையொப்பமிடுவதற்கு 20.08.2018 அன்று காலையில் தான் என்னை அழைத்தார்கள் என்றால் மேற்கண்ட தேதியில் மதியம் 1 மணிக்கு என்னிடம் பாப்பு மற்றும் அவருடை கணவர் செங்கோட்டுவேல் நேரிடையாக சாட்சி கையொப்பமிடுவதற்கு மாலை 4மணிக்கு நோட்டரி ஆபிஸ்க்கு வர சொன்னார்கள். நான் சென்றேன். பி.வா.சா.1ல் நான் சாட்சி கையொப்பமிடும் போது பாப்புவின் கணவர் அங்கு இருந்தார். பாப்புவின்

கணவர் பள்ளியின் தலைமை ஆசிரியர் என்றால் அவர் ஆசிரியர் ஆவார். பாப்பு படிக்கவில்லை அவருக்கு எழுத,படிக்க தெரியாது என்றால் சரிதான்.

11. அன்றைய தினமான 20.08.2018 தேதியில் பாப்புவின் கணவர் உடனிருந்த போது அவர் ஏன் மேற்படி உயிலில் சாட்சி கையொப்பமிடவில்லை என்று நான் அவரிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் பிரசாத்தின் நெருங்கிய நண்பர் என்பதார் அவர் தயார் செய்து போலியான பி.வா.சா.1 ஆவணமானஉயிலில் நான் சாட்சி கையொப்பமிட்டதாக துணைபோய் உள்ளேனா என்றால் சரியல்ல. பிரசாத்தின் தாயார் பாப்பு கையொப்பமிட்டத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1,2 சாட்சிகளாக விஜயகுமார், செந்தில்குமார் ஆகியோர்களை முன்பே எனக்கு தெரியுமா என்றால் செங்கோட்டுவேல் மூலம் எனக்கு அவர்களை தெரியும்.

12. பி.வா.சா.1 ஆவணமான உயிலில் நான் சாட்சி கையொப்பமிட்டு நோட்டரி ஆபிஸ்ல் விட்டு விட்டுவந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையொப்பமிட்டு உயில் என் வசம் வந்துவிட்டது. இறுதிவரை உயில் என் வசம்தான் இருந்தது என்றால் சரிதான். பாப்பு எப்போது இறந்தார் என்றால் பிப்ரவரி மாதம் 2019ம் வருடம் ஆகும். பாப்புவின் இறப்பிற்கு சென்று இருந்தேன். இறப்பிற்கு பிறகு 16 நாள் சடங்கு நடந்ததா என்றால் 16 நாள் சடங்கு நடக்கவில்லை காரணம் 6 மாதம் அடைப்பு இருந்தது.

13. பாப்பு இறந்தபோது உயிலை அவரின் உறவினர்களிடம் கொடுக்கவில்லையா என்றால் பாப்பு இறந்து விட்டதால் நான் கொடுக்கவில்லை. மேற்படி பாப்புவின் இறப்பில் உயில் இருப்பதை அவர் உறவினர்களிடம் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை காரியத்தின்போது சொல்லி கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். காரியம் எப்போது நடந்தது என்றால் 6 மாதம் கழித்து நடந்தது. காரியத்திற்கு செங்கோட்டுவேல் அழைப்புவிடுத்ததின் பெயரில் நான் சென்று இருந்தேன்.

14. மேற்படி காரியத்திற்கு நான் செல்லும் போது உயிலை எடுத்து சென்றேன் என்றால் சரிதான். காரியம் மதியம் நடந்தது. மீண்டும் சாட்சி காரியம் காலை 10 மணிக்கு நடந்தது என்று கூறினார். நான் காலை 11 மணி அளவில் காரியத்திற்கு சென்று கலந்து கொண்டேன். அந்த காரியத்தில் செங்கோடன் குடும்ப உறவினர்கள் இருந்தார்கள் என்றால் எவ்வளவு பேர் வந்து இருந்தார்கள் என்றால் சுமார் 20 பேர் வந்து இருந்தார்கள். அன்றைய தினம்

நானாகவே முன் வந்து பி.வா.சா.1 உயிலை உறவினர்கள் முன்னிலையில் பாப்புவின் அக்காவிடம் கொடுத்தேன். நான் அந்த உயிலை படித்து காண்பித்தேன்.

15. 20.08.2018லிருந்து சடங்கு நடந்த தினமாக 11.08.2019 வரை 1வருட காலம் அந்த உயில் என் வசம் இருந்துள்ளது என்றால் சரிதான். அந்த 1 வருட காலம் மேற்கண்ட உயிலை பற்றி பாப்புவின் உறவினர்கள் யாருரிடமும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1ஆன உயிலில் நான் மேற்படி உயிலை கைவசம் வைத்திருந்து பாப்புவின் இறப்பிற்கு பின்னிட்டு அதனை வெளிபடுத்த வேண்டுமென குறிப்பிட்டு எந்நவொரு வாசகமும் உயிலில் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.1 உயிலின் படி கண்டுள்ள சொத்துக்கள் பிரசாந்துக்கு தான் உரிமை என்றால் சரிதான்.

16. பி.வா.சா.1 உயில் பாப்புவால் எழுதபடவுமில்லை, கையொப்பமிடவும் இல்லை, என் வசம் ஒப்படைக்கபடவும் இல்லை, நான் அதனை 11.08.2019 அன்று உயிலை வெளிபடுத்தவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட உயில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். செங்கோடன் தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். 11.08.2019க்கு முன்பு பிரசாந்தின் தந்தை செங்கோட்டுவேல் இந்த உயிலை பற்றி பிராத்திடம் கூறுமாறு என்னிடம் சொல்லிவில்லை என்றால் சரிதான். ஏன் என்றால் அவ்வாறு உயில் எதுவும் இல்லை என்பதால் பிராசாந்தின் தந்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை